# அபிவிருத்தியை நோக்கி.....

## ஆதார வைத்தியசாலை
## பருத்தித்துறை




ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திச்சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sri Ramakirishna Sevashrama,**
Point Pedro.

## A MESSAGE OF BEST WISHES

Point Pedro Base Hospital has completed its service to all for the past 115 years. The Hospital, which was started in a small way and it has become a very big Banyan tree today. "Health is Wealth".

The hospital is situated in a very pleasing environment. The Hospital Development Committee is very eager to complete many projects at the earliest. We pray to Mother to shower Her Choicest Blessings on all concerned on this very happy and auspices occasion. Glory unto Mother.

**Swami Chidrupananda.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி யை நோக்கி ஆதார வைத்தியசாலை
# பருத்தித்துறை

மந்திகை ஆதார வைத்தியசாலை தனது 115ம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் இச் சந்தர்ப்பத்தில் எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1814ம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த மெதடிஸ்த மிஷனரிமார் இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றைக் கட்டி அர்ப்பணிப்போடு சமுதாயப்பணியினை மேற்கொண்ட சம்பவங்களை எளிதில் மறந்து விடமுடியாது.

மேலும் 1893ம் ஆண்டு மந்திகை ஆதார வைத்தியசாலையும் மிஷனரியான வண பீற்றர் பேசிவல் (REV PETER PERSIVAL) என்பவரால் கட்டப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை சிறப்பான பணியினை மக்கள் மத்தியில் ஆற்றி வருகின்றது. மேலும் அண்மைக் காலங்களில் இவ்வைத்தியசாலை சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது எனலாம். இவ்வளர்ச்சிப்பாதையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சிறப்பான பங்கினை வகித்து வருகின்றது. அத்துடன் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள நய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அவர்களின் அர்ப்பணிப்பும், செயல்திறனும் காரணமாக நோயாளர்களுக்கான அவசரச் சிகிச்சைப்பிரிவுகள், புதிய கட்டிடத்தொகுதிகள் புனர் நிர்மாண வேலைகள், வைத்திய நிபுணர்களின் வருகை என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை அவர்களின் நீண்டகால சேவையும் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது.

மேலும் வைத்தியசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு எடுக்கப்படும் முயற்சிகள், திட்டங்கள் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இன்னும் பல ஆண்டுகள் மக்கள் மத்தியில் இவ்வைத்தியசாலை சிறப்பான சேவை செய்ய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி.

*இறைபணியில்*
***வண. டேவிட் அழகராஜா,***
*பரு. கட்டைவேலி சேகர முகாமைக்குழு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.



வடமராட்சிப் பிரதேசத்தில் மருத்துவ சேவைகளின் இதயமாக விளங்குவது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை. முன்பொரு காலத்தில் இந்நாட்டின் சிறந்த வைத்தியசாலைகளில் ஒன்றாக விளங்கி சிறப்பான சேவைகளை வழங்கிய வரலாறு இவ்வைத்தியசாலைக்கு உண்டு. ஆனால் கடந்த இரு தசாப்த காலமாக மோசமான ஆளணி மற்றும் ஏனைய வளப்பற்றாக்குறைகளால் பாதிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கி வருகின்றது.

குறிப்பாக வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகளின தட்டுப்பாட்டினால் இரண்டாம் நிலை சேவைகளை வழங்க முடியாது யாழ் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை இடமாற்றும் ஒரு மையமாகவே இது செயற்பட்டு வந்தது.

ஆனால் அண்மைக்காலத்தில் நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளின் வருகையாலும், MSF நிறுவன வைத்திய நிபுணர்களின் சேவைகளாலும் இவ்வைத்தியசாலையின் சேவைகள் படிப்படியாக முன்னேறி வருகின்றன. அத்துடன் இவ்வைத்தியசாலையின் பௌதீக வளங்களிலும் மேம்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

இப்பிரதேச மக்களுக்கு இவ்வைத்தியசாலையிலேயே இயன்றளவு சேவைகள் கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கி நாம் உழைத்து வருகின்றோம். அந்த இலக்கை அடைய அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

நாம் இந்த
மண்ணில் உயிர்த்தபோது
எமக்கு உயிர் தந்தது இந்த
ஆரோக்கியசாலை.
நாம் நோயால் துவண்டு
பாயில் சரிந்தபோதும் - எமக்கு
உயிர் கொடுத்தது இந்த
ஆரோக்கியசாலைதான்.
எம்மில் இன்னும்
எத்தனையோ பேருக்கு
உயிர் கொடுக்கப்போவதும் இந்த
ஆரோக்கியசாலைதான்.
ஆராதிக்கப்படவேண்டியவை
ஆலயங்கள் மட்டுமல்ல.
ஆரோக்கியசாலைகளுந்தான்.
ஒரு வகையில் இதுவும் ஒரு
கடவுள் இல்லா கோவில் தான்.
வாருங்கள்!
ஒன்றுபட்டு இந்தக்
கோவிலை கட்டியெழுப்புவோம்.

***வைத்திய கலாநிதி. ஆ. கேதீஸ்வரன்,***
***பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,***
***யாழ்ப்பாணம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திப்பாதையை நோக்கி



வடமராட்சிப்பிரதேசத்தின் இருகண்கள் போன்றவை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையும் ஆகும். இவ்வைத்தியசாலைகளின் பௌதீக அபிவிருத்தியும், கனிவான நோயாளர் பராமரிப்பும் காரணமாக இன்று நோயாளர்கள் வைத்தியத்தேவைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குச் செல்வது குறைந்து இவ்வைத்தியசாலைகளின் சேவைகளை விருப்பத்துடன் பெற்றுவருகின்றனர்.

வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், பணியாளர்களது கடுமையான பற்றாக்குறை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில இருப்பினும் இங்கு பணியாற்றும் வைத்தியர்களுடைய அர்ப்பணிப்பான சேவையினாலும், தேவையை அறிந்து செயல்வடிவமாக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது அயராத முயற்சிகளினாலும், வைத்தியசாலையின் அபிவிருத்தித்திட்டங்களை துரிதமாக நிறைவேற்றி வளர்ச்சிக்கு உதவும் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினரது நடவடிக்கையினாலும் நோயாளர்களுக்கு மனதுக்கு திருப்தியான சேவை கிடைத்து வருகின்றது.

இருந்தும் உட்கட்டுமான வசதிகளிலும், அழகான வெளித்தோற்றங்களிலும், தூய்மையான நோயாளர் விடுதிகளிலும், நவீன மருத்துவ உபகரணங்களிலும் மேலும் அபிவிருத்தியடைய வேண்டிய தேவையினை நாம் காண்கின்றோம்.இவ்வாறான தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய அரசாங்க நிதி அவ்வப்போது பெற்றுக்கொள்ளப்படினும் அவை போதுமானவையாக இருப்பதில்லை. இந்நேரத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களும், வலிந்துதவும் தொண்டர் அமைப்புக்களும், அக்கறையுள்ள நிறுவனங்களும், நலன்விரும்பும் கொடையாளிகளும் இவ்வைத்தியசாலையின் அபிவிருத்தியில் தனித்தனியான சில பொறுப்புக்களை தாமாக முன்வந்து ஏற்று செயலுருப்பெற வைப்பார்களெனில், முழுமையான அபிவிருத்தி வெகுதூரத்தில் இல்லையெனலாம்.

***இ. வரதீஸ்வரன்,***
*பிரதேச செயலாளர்,*
*பருத்தித்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளரின்

## வாழ்த்துச் செய்தி.



வடமராட்சிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் மருத்துவ சேவையை பூர்த்திசெய்யவேண்டிய நிலையில் இருப்பது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையாகும். இவ்வைத்தியசாலை நீண்ட காலமாக ஆளணிப் பற்றாக்குறை, மற்றும் அடிப்படைக் கட்டுமானங்கள், மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை காரணமாக மக்களுக்கான சேவைகள் வழங்குவதில் பல இடர்களை எதிர்நோக்கி வந்திருக்கின்றது. இவ் வைத்தியசாலைக்கென ஒரு அபிவிருத்திக்குழு அமைக்கப்பட்டு, இதன் வளர்ச்சிக்காக ஓர் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, பூர்த்தியடைந்த வேலைத்திட்டங்களை கையளிக்கும் நிகழ்வு இன்று இடம்பெறுகின்றது.


இவ்வைத்தியசாலை அபிவிருத்தியடைந்து, இப்பிரதேச மக்களுக்கான சேவைகளை முழுமையாக வழங்கக்கூடிய நிலை ஏற்படும்போது, அது இம்மக்களுக்கு பேருதவியாக அமையும். அதற்கான வழிகாட்டலை வழங்கிவரும் அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க சேவை மக்களால் நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றது. இவ்வைத்தியசாலை மேலும் பல அபிவிருத்திகளைக்கண்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்ய எல்லாம் வல்ல இறைவனின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*சி. சத்தியசீலன்,*
*பிரதேச செயலாளர்,*
*வடமராட்சி தெற்கு மேற்கு,*
*கரவெட்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவரின் உள்ளத்திலிருந்து,



வடமராட்சி மக்களுக்கு ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக மருத்துவசேவை வழங்கி வருவதில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முதன்மை பெறுகிறது. ஒரே நேரத்தில் 264 உள்ளக நோயாளர்களுக்கு வைத்திய வசதி அளிக்கக்கூடிய வளம் நிறைந்தது. போர்ச்சூழல் எமது பிரதேசத்தை ஆக்கிரமித்த முந்திய காலகட்டத்தில், எண்பதுகளின் ஆரம்பத்தில் முழு ஆளணி வசதியுடன், மிகவும் தரமான சிறப்பான சேவையை வழங்கியது. எண்பதுகளின் பிற்பகுதியில் ஆரம்பித்து இன்றுவரை தொடர்கின்ற ஒருவித அசாதாரண சூழ்நிலை இவ்வைத்தியசாலையின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியது. நிபுணத்துவ வைத்தியர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் முதற்கொண்டு சாதாரண தொழிலாளி வரையிலான எல்லா தரத்திலான உத்தியோகத்தர்களிலும் ஆளணி பற்றாக்குறை நிலவிவந்தது. இப்போதைய சுகாதாரப் பணிப்பாளரின் அயராத முயற்சியினால் ஆளணிப்பற்றாக்கறை ஓரளவிற்கேனும் நிவர்த்திக்கப்பட்டுள்ளது.எவ்வாறாயினும இங்கு வேலை செய்கின்ற அனைத்து தரத்திலான உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக இன்றுவரை அதன் சேவையின் தரத்தில் குறைவில்லாது நிகரில்லா சேவையை தொடர்கிறது.

நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற மருத்துவத்துறையோடு ஈடுகொடுத்து இப்பிரதேச மக்களுக்கும் நவீன மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதற்கு இவ்வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நோக்கத்திற்காக வைத்தியசாலை அபிவிருத்திச்சபை எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் இதன் செயற்பாடுகளில் சிறிது தொய்வு ஏற்பட்டிருந்தாலும் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் யாழ் பிராந்திய சகதார பணிப்பாளராக பொறுப்பேற்ற பின்பு அவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இவ்அபிவிருத்திச்சபை புத்தூக்கம் பெற்று இயங்கிக்கொண்டிருக்கிறது. சுனாமிக்கு பின் இங்கு உதவிக்கு வந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமும் சகாதார திணைக்களத்தின் உதவித்திட்டங்கள் மூலமும் இவ்வைத்தியசாலையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்னும் பல வேலைத்திட்டங்கள் நடைமுறையிலுள்ளன.

ஏ 9 பாதை மூடப்பட்டு மீண்டும் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டபோது உறுதியளித்த வேலைத்திட்டங்களை நிறைவேற்றாது தொண்டு நிறுவனங்கள் வெளியேறின. கட்டடப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக பல வேலைத்திட்டங்களுக்கு ஒப்பந்தகாரர்களை பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டபோது வைத்தியசாலை அபிவிருத்திச்சபை தானே பொறுப்பேற்று வைத்தியசாலைப் பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையுடன் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. அவற்றில் சிலவற்றை இன்று அங்குரார்ப்பணம் செய்து வைப்பதில் அபிவிருத்திச் சபைத் தலைவர் என்ற வகையில் நான் பெருமை அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலை மாவட்டவைத்திய அதிகாரியே அபிவிருத்திச்சபையின் தலைவராகவும் செயற்படவேண்டியிருப்பதால் பதில் மாவட்ட வைத்திய அதிகாரியாகிய நான் இவ்அபிவிருத்திச்சபையுடன் சில மாதங்களாகவே சேர்ந்து இயங்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. மிகக்குறுகிய காலத்தில் கிட்டத்தட்ட 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய வேலைத்திட்டங்களை இச்சபை நிறைவேற்றியுள்ளது.

இன்று அபிவிருத்தியை நோக்கி என்ற பயணத்தில் தொடர்ந்து பயணிப்பதற்கு இன்னும் பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவ்வைத்தியசாலையை சகல வசதிகளுமுடைய வைத்தியசாலையாக உருவாக்குவதற்கு இப்பிரதேசத்திலுள்ள பெரியோர்கள், புத்திஜீவிகள், நலன்விரும்பிகள், சமூகஆர்வலர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் இப்பிரதேசத்தை சேர்ந்தவர்கள், வர்த்தகப்பெருமக்கள், பொதுமக்கள் என அனைவருடைய உதவிகளையும் ஒத்தாசையையும் இவ்அபிவிருத்திச்சபைவேண்டி நிற்கின்றது.

சுகநலம் என்பது உடல் நலம், உளநலம், ஆன்மீக நலம் ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கியது. நாம் கோயில்களை நாடுவது போல உடல், உள ஆரோக்கியத்திற்கு வைத்தியசாலைகளை நாடுகின்றோம். எனவே இரு இடங்களும் புனிதமாக பேணப்படவேண்டியவையாகும்.

நன்றி

*வைத்தியகலாநிதி வே. ஜெயராசா (பல்வைத்திய நிபுணர்)*
*பதில் மாவட்ட வைத்திய அதிகாரி*
*ஆதாரவைத்தியசாலை,*
*பருத்தித்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திப் பணியில் அபிவிருத்திக் குழு



வடமராட்சி மக்களுக்கு வைத்திய சேவையை கடந்த நூற்றிப் பதினைந்து வருடங்களாக ஆற்றிவருகின்ற ஒரே ஒரு நிறுவனமான பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, அண்மைக்காலத்தில் அபிவிருத்திக் குழுவினரின் முயற்சியாலும் அயராத உழைப்பாலும் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களது வழிகாட்டலிலும், பல அபிவிருத்திப்பணிகளை பூர்த்தி செய்துள்ளது.

மிக அண்மைக்காலங்களில் இருந்து சிறுசிறு தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்தியாவசியமானதும் அவசரமானதுமான வேளைகளில் மருந்துகள், சத்துணவுகள், சிறுசிறு வைத்திய உபகரணங்கள் முதற் கொண்டு அபிவிருத்திக் குழுவினரால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை பல தொண்டர் நிறுவனங்களின் உதவிகளையும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்று பல புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன. அரசின் துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழும் நிதிகள் எமக்கு ஒதுக்கப்பட்டன. அதற்கான வேலைத்திட்டங்களும் எம்மால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2007ம் ஆண்டு இறுதியில் பல திருத்தவேலைகள், புதிய கட்டிடங்கள், பாதைகள் போன்ற இன்னும் பல வேலைகள், எமது வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் மிகவும் ஈடுபாட்டுடன் சிரமதானம் மூலம் செய்து முடித்திருக்கின்றார்கள். அவர்களின் அளப்பரிய சேவைக்கு அபிவிருத்திக்குழு தலைவணங்குகிறது.

வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை மற்றும் தாதியர் சிற்றூழியர்கள் பற்றாக்குறைகள் ஓரளவு தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. வைத்திய சேவையைப் பெற்றுவரும் மக்கள் திருப்தி அடைவது காணக்கூடியதாகவிருக்கிறது. காலக்கிரமத்தில் பூரணமான சேவையை இவ் வைத்தியசாலை வழங்கும் என நம்புகிறோம். நடமாடும் வைத்திய நிபுணர் சேவைகள் நடைபெற்றபோது பலர் பயனடைந்துள்ளனர்.

எமது பணிகள் தொடர இனிமேல் செய்யவேண்டிய வேலைகள் செய்வதற்கு அபிவிருத்திக் குழுவின் கைகளைப் பலப்படுத்த எல்லோரையும் வேண்டுகின்றோம். எங்கெங்கு மனிதநேயம் பேணப்படுகிறதோ அங்கெல்லாம் இறைவன் இருப்பான். எமது பணிகளுக்கு உதவிய அனைவருக்கும் சேவைமனப்பாண்மையுடன் சேர்ந்து இயங்கும் அபிவிருத்திக்குழுவினர் சார்பாகவும், வடமராட்சி மக்கள் சார்பாகவும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.


*சதாபொன்ஸ்*
*அல்வாய்.*

*மு. சுந்தரலிங்கம்,*
*செயலாளர்,*
*பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை,*
*அபிவிருத்திக்குழு.*
A/C NO. **இலங்கை வங்கி பரு.** 7342649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக
# ஒன்றிணைவோம்!



வளர்ந்து வரும் மருத்துவ சேவைக்கு ஏற்ப மருத்துவ வசதிகளும் மாற வேண்டும் வளரவேண்டும். அத்தகைய வளர்ச்சியை நோக்கி நாம் எழுந்துள்ளோம். மனிதனுக்கு எப்போதும் சவாலாக இருப்பதும், ஆயுளுக்கு கேள்விக்குறியாக இருப்பதும் ஆரோக்கியமான வாழ்வியல்தான். இந்த வாழ்வியலை தனிமனிதனிலிருந்து சமுதாயம் வரை கொண்டுசெல்வது மருத்துவ சேவையும் அதனோடு இணைந்த துணைச்சேவைகளும் தான். உலகின் எந்த மூலையிலும நோய்க்கிருமிகளுடன் போராடி நோயினைத் தகர்த்தெறிந்து கைகொடுக்கும் இந்த இரு சேவைகளும் இணைந்து இன்று சுகாதார சேவையின் நாதமாக கரம் கொடுக்கின்றது. அந்த வகையில் இன்று அபிவிருத்திப்பாதையில் முதல் அடிவைக்கும் ஒரு சேவையின் கரமாக மந்திகை ஆதார வைத்தியசாலை தலை நிமிர்ந்து நிற்கின்றது.

ஆரம்ப காலத்தில் எத்தனை இடர்கள் ஆளணி சேவைக்குப் பல தடைகள். இருந்த போதிலும் அண்மைக்காலத்தில் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களின் விடா முயற்சியினாலும், நிர்வாகத்திறனாலும் ஆளணி பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டு தொழில்சார் நிபுணர்களின் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு கிடைத்துள்ள குறிப்பிடத்தக்களவு வெற்றியாகும்.

சுகாதார சேவையில் வடமராட்சி முழு மக்களையும், தென்மராட்சி மக்களையும், வலிகாமம் மக்களையும் ஒன்றிணைத்து மருத்துவ சேவைக்கு தொட்டில் கட்டி நோயாளர் எனும் குழந்தையை அரவணைக்கும் மருத்துவத் தாய் இன்று தலை நிமிர எத்தனையோ தோள்கள் சுமைதாங்க, எத்தனையோ கரங்கள் காவி வர அபிவிருத்தி பாதையில் இன்று அடியெடுத்து வைத்து விட்டாள். இனி எம்பயணம் தொடர அபிவிருத்தி வளர்ச்சிக்கு நீங்களும் தோள் கொடுங்கள்! கைகொடுங்கள்! வாருங்கள்! வளர்ச்சிக்கு வடம் பிடியுங்கள்!

இப்பாரிய பணியை பல பக்கங்களிலும் அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பது இப்போது அவசியமானது. உங்கள் கரங்கள் நாளைய அபிவிருத்திக்கு முதல் வித்தாகும் வளர்ச்சிக்கு கரம் கொடுக்க உங்களை அழைக்கின்றோம். வாருங்கள்! வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு தோள் கொடுங்கள்!

***திரு. அகிலன்,***
*(ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)*
*பொருளாளர்,*
*வைத்தியசாலை அபிவிருத்திக்குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாட்கள் | சிகிச்சைநிலையம் | நேரம் | பார்வையிடும் மருத்துவம் |
|---|---|---|---|
| திங்கட்கிழமை | சத்திரசிகிச்சை | காலை 8.00-1.00 வரை | சத்திரசிகிச்சை நிபுணர் எல்லைகடந்த மருத்துவ பிரிவு, பிரான்ஸ் |
| | பெண்நோயியல் | காலை 8.00-1.00 வரை | |
| | குடும்பக்கட்டுப்பாடு | காலை 8.00-1.00 வரை | |
| செவ்வாய்கிழமை | சிறுவர்நோய் | காலை 8.00-1.00 வரை | |
| | மனநோய் | காலை 8.00-1.00 வரை | |
| புதன்கிழமை | பொதுமருத்துவம் | காலை 8.00-1.00 வரை | |
| | இதய நோய் மூட்டுவாதம் | மத்தியானம் 1.00-3.00 வரை | |
| (மாதத்தில்வரும் முதல் புதன் கிழமை மட்டும்) | கண்சிகிச்சை | காலை 8.00-1.00 வரை | கண்சத்திர சிகிச்சை நிபுணர் குகதாஸன் |
| | புற்றுநோய் (மாதத்தில் வரும் முதலாவது புதன் கிழமை) | காலை 8.00-1.00 வரை | புற்று நோய் நிபுணர் ஜெயக்குமார் |
| வியாழக்கிழமை | மனநோய் | காலை 8.00-1.00 வரை | மனநோய் நிபுணர் ஆலோசகர் |
| | கர்ப்பணிகளுக்கான சிகிச்சை | காலை 8.00-1.00 வரை | வைத்தியகலாநிதி சா. சிவயோகன் |
| வெள்ளிக்கிழமை (மாதத்தில் வரும இறுதி வெள்ளிக கிழமை மட்டும் நடைபெறும்) | காசநோய் | காலை 8.00-1.00 வரை | மார்பு நோய் சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி யமுனானந்தா |
| | சிறுவர்நோய் | காலை 8.00-1.00 வரை | |
| சனிக்கிழமை | நீரிழிவுநோய் | காலை 8.00-1.00 வரை | |

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல : 021 226 3261**

**021 226 3262**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளடக்கம்** **பக்கம்**


வாழ்த்து செய்திகள் I - IX

கடந்த மூன்றாண்டுகளில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க முக்கிய அபிவிருத்தி

1. பிரசவ விடுதி 01
2. பிரசவ அறை 02
3. பார்வையாளர் தங்குமிடம் 02
4. மலேரியா தடை இயக்கப்பிரிவு 03
5. உளநல விடுதி 03
6. உளவள ஆலோசனைப் பிரிவு 04
7. அவசர சிகிச்சைப் பிரிவு 04
8. பற்சிகிச்சை நிலையம் 05
9. இரத்தவங்கி 05
10. உயிரியல் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் - Micro biology Laboratory 06
11. கதிரியக்கவியற் பிரிவு -X-Ray Department 06
12. காச நோயாளர் பரிசோதனை செய்யும் இடம் 06
13. பொது மருத்துவ விடுதி 07
14. இயன் மருத்துவப்பிரிவு 07
15. திட்டமிடல் பிரிவு 07
16. சத்திரசிகிச்சை பெண் நோயாளர் விடுதி 08
17. மின்னுற்பத்தி இயந்திர அறை 08
18. நோயாளர் காவு வண்டிகள் – Ambulance 09
19. வைத்தியசாலை முன் வாசல் கூரை அமைப்பு 09
20. விசேட புனரமைப்பு 10
21. வழிகாட்டி குறியீடுகள் 10
22. வைத்தியசாலை மாதிரி வரைபடம் 10
23. வைத்தியசாலை முன்புற பூந்தோட்டம், வைத்தியசாலை பெயர் பலகை 11
24. இயன் மருத்துவப்பிரிவு உபகரணங்கள் 11
25. வெந்நீர்த் தாங்கிகள் 11
26. சுற்று மதில் 12
27. இதய துடிப்புப் பதிவகம் 12
28. இரத்தவங்கிக்கான பாதை 12
29. பிரேத அறைக்குச் செல்லும் பாதை 13
30. பிரசவ விடுதிக்குச் செல்லும் பாதை 13

TASKS TO BE ACHIEVED IN FUTURE 14

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு 16

நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த மூன்றாண்டுகளில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க முக்கிய அபிவிருத்தி திட்டங்கள் உங்களின் பார்வைக்காக......

**1. பிரசவ விடுதி**



தொற்றுநோய்களிலிருந்து கர்ப்பிணித்தாய்மார்களினதும், பிரசவித்த தாய் சேயினதும் ஆரோக்கியமான சுகாதார நலனை மேம்படுத்துவதற்காகவும் இலகுவாக சுத்தம் செய்வதற்காகவும் பிரசவ விடுதியின் தரை, மலசலகூடம் என்பவற்றிற்கு மாபிள் பதிக்கப்பட்டு தாய்மார்களின் விசேட மருத்துவப்பராமரிப்பிற்காக கட்டில்கள் பிரத்தியேகமாக திரைச்சீலையினால் பிரிக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது. இது UNICEF நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆதாரவைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

**மாபிள் பதித்த நிலையிலுள்ள மலசலகூடம் (பிரசவ விடுதி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பிரசவ அறை

வளர்ந்துவரும் மருத்துவ சேவைக்கு இணையாக பிரசவத்தின்போது நோய்க்கிருமிகளின் தாக்கங்களிலிருந்து தாய் சேயினது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாக அறை முழுவதும் அதியுயர் தரத்திலான மாபிள் கழுவுநீர் தொட்டி நீர் வழங்கு வசதியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதற்கான உதவியை போர்த்துக்கல் நிறுவனம் வழங்கியது.





## 3. பார்வையாளர் தங்குமிடம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாக பார்வையாளர் தங்குமிடத்திற்கு இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டும், நோயாளர்களைப் பார்வையிட வருகின்ற உறவினர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் வைத்தியசாலையின் ஏனைய இடங்களிலும் காத்திருப்பதைத் தவிர்க்கும் நோக்குடனும், சிகிச்சைக்கான நோயாளர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்கும் வசதியான பார்வையாளர் தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது. இது UNICEF நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் நிர்மாணிக்கப்பட்டது.

### 4. மலேரியா தடை இயக்கப்பிரிவு




நோயாளர்கள் அதிக தூரம் பயணஞ்செய்யாது ஆய்வுகளை மேற்கொள்ளும்பொருட்டும், ஆய்வு முடிவுகளை தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்ளும் வகையிலும் நவீன வசதிகளுடனும், கண்ணாடி இணைப்புகளுடன்கூடிய ஆய்வுகூடமும், இரத்தசேகரிப்புப் பிரிவும் UNICEF நிதி உதவியுடன் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் நிர்மாணிக்கப்பட்டது.

### 5. உளநல விடுதி



உளநலநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர் வசதியை மேம்படுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அவ்விடுதியின் மலசலகூடங்கள் திருத்தியமைக்கப்பட்டு சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. உளவள ஆலோசனைப் பிரிவு






உளநல நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன நலனை மேம்படுத்தும் நோக்குடன், அந்நோயாளர்களுக்கான உளவள ஆலோல சனைகளை வழங்கி, சிகிச்சை அளிப்பதற்கென தனியான, அமைதி நிறைந்த, இரண்டு அறைகளும் ஒரு சிறிய மண்டபத்துடன்கூடிய கட்டடத்தொகுதியொன்று அமைக்கப்பட்டது. இதை புதிதாக நிர்மானணிப்பதற்கு கொழும்பு-கொட்டாஞ்சேனை அரிமாக் கழகம் நிதயுதவி வழங்கியுள்ளது.

## 7. அவசர சிகிச்சைப் பிரிவு





அவசர நோயாளர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்காக அவசர சிகிச்சைப் பிரிவு தேவையான நவீன உபகரணங்களுடன் மாற்றி அமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்குள்ள இலத்திரனியல் சாதனங்களின் ஆயட்காலத்தை அதிகரிக்கும் வகையில் குளிரூட்டிகளும் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவி போர்த்துக்கல் குழுவினரால் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பற்சிகிச்சை நிலையம்




அதிகளவு நோயாளர்களை ஒரே தடவையில் பார்ப்பதற்கு வசதியாகவும், பல் வைத்திய உபகரணங்கள் அதிக காலம் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறும் இப்பிரிவு குளிரூட்டற்பிரிவாக மாற்றியமைக்கப்பட்டது. இது போர்த்துக்கல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது.

## 9. இரத்தவங்கி




இரத்தசேகரிப்பு, இரத்தப்பரிசோதனை மற்றும் இரத்ததான நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக இப்பிரிவு நவீன சாதனங்களுடன்கூடிய கட்டடமாக புனரமைக்கப்பட்டது. இது போர்த்துக்கல் நிறுவனத்தின் நிதி உதவியுடன் செய்து கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. உயிரியல் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் - Micro biology Laboratory

எவ்வகையான கிருமித்தொற்று தொற்றியுள்ளது என்பதையும், இதற்காக எவ்வகையான மருந்துகளைப் பாவிக்கமுடியும் என்பதையும் திட்டவட்டமாக அறிவதற்கு தேவையான ஆய்வுகூடமொன்றினை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை அமைத்துத்தந்துள்ளது.





## 11. கதிரியக்கவியற் பிரிவு -X-Ray Department



சுமார் 6 வருட காலமாக எக்ஸ் கதிர் தொழில்நுட்பவியலாளர் இல்லாத குறை நீக்கப்பட்டு கடந்த ஓகஸ்ட் 2007 தொடக்கம் இப்பிரிவு இயங்கி வருகின்றது.

## 12. காச நோயாளர் பரிசோதனை செய்யும் இடம்



காச நோயினால பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கென யாழ் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் அனுசரனையுடன ஆய்வுகூடத்தில் பிரத்தியேக இடமொன்று அமைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பொது மருத்துவ விடுதி




நோயாளர்களின் வசதி கருதி விடுதி முழுவதும் வர்ணம் பூசப்பட்டது. இதற்கான நிதி உதவி மக்கள் வங்கி பருத்தித்துறை கிளையினால் வழங்கப்பட்டது.


## 14. இயன் மருத்துவப்பிரிவு




இப்பிரிவில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக நவீனமயப்படுத்தப்பட்டு கட்டிட வேலைகளும், கூரையின் ஒரு பகுதியின் திருத்தவேலைகளும் செய்யப்பட்டது. இது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரிவிற்கான இயன் மருத்துவ உபகரணங்கள் வைத்திய கலாநிதி சசிகாந்த் அவர்களால் வழங்கப்பட்டது.

## 15. திட்டமிடல் பிரிவு





மாறிவரும் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்பத்தை கட்டியெழுப்புவதற்கு புள்ளிவிபரவியல் திட்டமிடல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதியுதவி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. சத்திரசிகிச்சை பெண் நோயாளர் விடுதி



கடந்த பல வருடங்களாக மழைக்காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களால் விடுதி நோயாளர்களும், ஊழியர்களும் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனைத் தவிர்க்கும் நோக்குடன் விடுதியின் கூரை முற்றாக அகற்றி மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதற்கான நிதியுதவியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டது.

## 17. மின்னுற்பத்தி இயந்திர அறை

தற்காலிகமாக இருந்த கட்டிட அமைப்பை அகற்றி நிரந்தர கட்டிடமாக புதிதாகக் கட்டப்பட்டது. மின்னுற்பத்தி இயந்திரப்பகுதி மேற்பார்வையாளர்களாக ஊழியர்கள் 24 மணித்தியாலமும் பணிபுரிவதற்கு வசதியாக இரண்டு அறை கொண்ட கட்டிடம் புதிதாக கட்டப்பட்டது. இக்கட்டிடம் அரசின் துரித அபிவிருத்தியினால் கிடைத்த நிதியிலிருந்து அமைக்கப்பட்டது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. நோயாளர் காவு வண்டிகள் – Ambulance

UNECEF நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு நோயாளர் காவு வண்டி அடங்கலாக தற்போது 2 நோயாளர் காவு வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.






## 19. வைத்தியசாலை முன் வாசல் கூரை அமைப்பு




இதுவரை காலமும் மக்கள் மற்றும் ஊழியர்கள் வைத்தியசாலை வாசற்புறவழியாக நோயாளர்களை வாகனங்களில் கொண்டுவரவோ இடமாற்றம் செய்யவோ விசேடமாக மழை வெயில் காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இதனைத் தவிர்க்குமுகமாக முன்பக்கக்கூரை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினால் அரசின் துரித அபிவிருத்தி திட்டநிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. வார்ட் புனரமைப்பு






கழிவகற்றும் பிரிவு, சத்திரசிகிச்சைக்கூடம் என்பன MSF நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டது.

## 21. வழிகாட்டி குறியீடுகள்




நோயாளர்களின் வசதிக்காக இலகுவாக விடுதிகளையும், சிகிச்சை நிலையங்களையும் சென்றடைவதற்கான வழிகாட்டி குறிகாட்டி அமைக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியினை HNB நெல்லியடி வழங்கியுள்ளது.

## 22. வைத்தியசாலை மாதிரி வரைபடம்



வைத்தியசாலையினுள் இடங்களை இலகுவில் இனங்கண்டு அவற்றை எளிதிற் சென்றடைவதற்குவசதியாக, ஒரே இடத்தில் பார்க்கக்கூடியதாக வரைபடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியினை இலங்கை வங்கி வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. வைத்தியசாலை முன்புற பூந்தோட்டம், வைத்தியசாலை பெயர் பலகை




வைத்தியசாலை முன்புறமுள்ள தோட்டம் அமைப்பதற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினாலும் அதன் பெயர் பலகை அமைப்பதற்கு இவ்வைத்தியசாலையில் பணிபுரிந்து இடமாற்றலாகிச் சென்ற திருமதி ரஜிதா ஜெயந்தன் அவர்களின் அன்பளிப்பினாலும் மேற்கொள்ளப்பட்டது.

## 24. இயன் மருத்துவப்பிரிவு உபகரணங்கள்





வெளிநோயாளர்கள், சுகவீன நிலைய நோயாளர்கள், உள்ளக நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக இயன் மருத்துவ உபகரணங்கள் வைத்திய கலாநிதி சசிகாந்த் அவர்களால் வழங்கப்பட்டது. ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினால் இப்பிரிவு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## 25. வெந்நீர்த் தாங்கிகள்

விடுதிகளில் பராமரிக்கப்படும் நோயாளர்களுக்குத் தேவையான வெந்நீரை வழங்குவதற்கு வசதியாக தாங்கிகள் விடுதிகளில் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவி வைத்திய கலாநிதி சசிகாந்த (இலண்டன்) அவர்களால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. சுற்று மதில்






நீண்டகாலமாக வைத்தியசாலையில் ஆங்காங்கே இருந்துவந்த வேலிகள் அகற்றப்பட்டு, சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினால் அரசின் துரித அபிவிருத்தி திட்டநிதி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 27. இதய துடிப்புப் பதிவகம்



இதய நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனை கருதி, இப்பிரிவு ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதனால் வெளி நோயாளர்களும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும் பயனடைந்து வருகின்றனர்.

## 28. இரத்தவங்கிக்கான பாதை




இரத்தவங்கிக்கு நோயாளர்களையும், இரத்ததானம் வழங்குவோரை அழைத்துச்செல்லவும், சீமெந்தினாலான பாதை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் அமைத்துத் தரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. பிரேத அறைக்குச் செல்லும் பாதை



இறந்தவர்களின் உடலை பிரேத அறைக்கு எடுத்துச்செல்வதற்கு வசதியாக சீமெந்தினாலான பாதை இல்லாத குறைபாட்டை நீக்கி புதிய சீமெந்திலான பாதை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் அமைத்துத் தரப்பட்டது.

## 30. பிரசவ விடுதிக்குச் செல்லும் பாதை





கர்ப்பிணித்தாய்மார்களும் பிரசவித்த தாய் சேயினதும் வசதி கருதி அவர்களை வைத்தியசாலையின் இதர பிரிவுகளுக்கு அவசர சத்திர சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு போன்றவற்றிற்கு கொண்டுசெல்வதற்காக 110 அடி நீளமான பாதை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் அரசின் துரித அபிவிருத்தி திட்டநிதிமூலம் அமைத்துத் தரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tasks to be achieved in future

1. Tiling of all wards and OPD
2. Constuction of drug stors
3. Constuction of Intensive Care Unit
4. Constuction of Mental Health ward
5. Constuction of Consultant quarters ( 2 story, 4 units )
6. Constuction of Doctors quarters ( 20 rooms )
7. Constuction of ward complexes ( 3 No )
8. Air conditioners for Laboratory and X-Ray Unit
9. Haematology Analyzer for Laboratory
10. Computer network system to hospital wards and specialized units.

11. Emergency Unit

    ☆ Arterial Blood Gas Analyzer
    ☆ Pulse Oxymeter Probe
    ☆ Sucker Bottle-10
    ☆ Pulse Oxymeter-01

12. Items needed for Operation Theatre

    ☆ Air Conditioner-02
    ☆ Washing Machine-01
    ☆ Hot Plate-01
    ☆ Kettle-01
    ☆ Television-01
    ☆ Floor Tiles

13. Ward 01 & 02

    ☆ Electric Kettle-01
    ☆ Fan-08
    ☆ Television-01
    ☆ Dining Table-01
    ☆ Boiler-01
    ☆ Floor Tiles


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 Ward 4 & 5

- ☆ Hot Plate-01
- ☆ Television-01
- ☆ Electric Kettle-01
- ☆ Filter-01
- ☆ Floor Tiles

15. Ward-06

- ☆ Hot Plate-01
- ☆ Television-01
- ☆ Floor Tiles

16. Ward-07

- ☆ Fan-03
- ☆ Pulse Oxymeter - 01
- ☆ Bar Bed-02
- ☆ Back Rest-05
- ☆ Television-01
- ☆ Stretcher with Cushion-01
- ☆ Floor Tiles

17. Ward-08

- ☆ Television-01
- ☆ Floor Tiles

12. Ward-09

- ☆ Fan-04
- ☆ Television-01
- ☆ Floor Tiles



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு



| | | |
|---|---|---|
| போசகர் | - | வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம். |
| தலைவர் | - | வைத்தியகலாநிதி வி.ஜெயராஜா, (பதில் மாவட்ட வைத்திய அதிகாரி) |
| உபதலைவர் | - | திரு.செ.சேதுராஜா (அதிபர், யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) |
| செயலாளர் | - | மு. சுந்தரலிங்கம், பிரபல வர்த்தகர் |
| உப செயலாளர் | - | திரு.இ.இராகவன்,அதிபர், யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம் |
| பொருளாளர் | - | திரு.ஆர்.அகிலன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்) |

உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| திரு.எஸ்.சற்குணாநந்தம் | - | சமூகசேவையாளர் |
| திரு.எஸ்.தங்கராசா | - | பிரபல வர்த்தகர் |
| திரு.வ.செல்வராசன் | - | பிரபல வர்த்தகர் |
| திரு.செ.ஞானச்சந்திரன் | - | கிராமசேவையாளர் |
| திரு.பெ.பூபாலசிங்கம் | - | பிரதமஎழுதுவினைஞர் |
| திரு.மு.ரவிச்சந்திரன் | - | மேற்பார்வை பொதுச்சுகாதாரபரிசோதகர் |
| திரு.எஸ்.சுந்தரமூர்த்தி | - | பிரதிக்கல்விப் பணிப்பாளர் |
| திரு.சி.பத்மநாதன் | - | சமாதான நீதவான் |
| திரு.வின்சன் டி போல் | - | சமூக சேவையாளர் |
| திரு.கே.சிவராஜா | - | கட்டட ஒப்பந்தகாரர் |
| திரு.எஸ்.கணபதிப்பிள்ளை | - | சமாதான நீதவான் |
| திரு.கே.குமாரதாஸன் | - | முகாமையாளர்,எச்.என்.பி அஷூரன்ஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிவிருத்தியை நோக்கிய பாதையில்**
**ஊக்கத்துடன் பங்களித்த உங்களுக்கு**
**எங்கள் உளங்கனிந்த**
**நன்றிகள்!**

115 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், அபிவிருத்தி வேலைகளை தெளிவுபடுத்தும் நோக்கத்திலும் உருவாகிய இம்மலரிற்கு, ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் தந்த பெரியோர்களுக்கும், மலரை அழகுற வடிவமைத்ததற்கு உதவிய தோளோடு தோள் நின்ற எம் அன்பு நெஞ்சங்களுக்கும், மலரை அச்சிட்டு தந்துதவிய அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Design Lab, 0773720028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org